பேட்டை ரூரல் ஊராட்சிமன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு.ஐ.சின்னதுரை

ந.க.எண் : 02/2023-2024 நாள் : 08.03.2024

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு – திருநெல்வேலி மாவட்டம் - மானூர் ஊராட்சி ஒன்றியம் - பேட்டை ரூரல் ஊராட்சி – பேட்டை கிராமம், குடியிருப்பு மனைப்பிரிவு திட்ட அனுமதி மற்றும் - D.T.C.P. தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது – ம.வ / திருநெல்வேலி மா.ந.ஊ.எண் : SWP/68/2023 இறுதி ஒப்புதல் வழங்கி – உத்தரவிடல்

பார்வை :

1. அரசாணை (நிலை) எண் 71, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் : 16.08.2003

2. அரசாணை நிலை எண் 181, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் : 09.12.2020

3. இணை இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருநெல்வேலி மாவட்டம் அவர்களின் ROC No. QHHOWEMN/2023/TCP Date : 13.07.2023

உத்தரவு :

திருநெல்வேலி மாவட்டம், மானூர் ஊராட்சி ஒன்றியம், பேட்டை ரூரல் ஊராட்சி, பேட்டை கிராமத்தில் சர்வே எண் : 114/2A2-ல் 1052 சதுரமீட்டர் (0.37 ஏக்கர்) பரப்பளவில் அமையவுள்ள "குடியிருப்பு மனைப்பிரிவிற்கு" இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருநெல்வேலி அவர்களால் ம.வ/திலி மா.ந.ஊ.எண் : SWP/68/2023 என்ற எண்ணில் நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவு 1052 ச.மீ (0.37 ஏக்கர்) பரப்பில்அமைந்துள்ளது. இதில் 7 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இம்மனைப்பிரிவு 479.83 சதுர மீட்டர் பரப்பளவுள்ள சாலைகள், 26.00 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலம் பொது உபயோகத்திற்கும் ஊராட்சிக்கு தானப்பத்திரப் பதிவு எண் : 2672/2023-ன் மூலம் தானமாக வழங்கப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவிற்கு கீழ்க்கண்ட விவரப்படி மனைப்பிரிவு உரிமையாளரால் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

பேட்டை ரூரல் ஊராட்சிக்கு 1052 ச.மீ (0.37 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமையும் 7 மனைக்கு கூராய்வு கட்டணமாக மனை ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் ரூ.7000/- (ரூபாய் ஏழாயிரம் மட்டும்) தமிழ்நாடு கிராம வங்கி வரைவோலை எண் : 116926 நாள் : 05.03.2024 மற்றும் ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) தமிழ்நாடு கிராம வங்கி வரைவோலை எண்:116927 நாள் : 05.03.2024 படி செலுத்தப்பட்டுள்ளது.

Scanned with OKEN Scanner

எனவே பின்வரும் நிபந்தனைகளுடன் இக்குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

1. இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம் அவர்களின் ROC No.QHHOWEMN/2023/TCP Date : 13.07.2023 குறிப்பிட்டுள்ள நிபந்தகைள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.
2. மேற்படி கடிதத்துடன் வரப்பெற்ற மனைப்பிரிவு வரைபடம் தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் ROC No. QHHOWEMN/2023/TCP Date : 13.07.2023ல் குறிப்பிட்ட 7 மனைகள் விற்பனை மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி செயல்பட வேண்டும்.
3. மனைப்பிரிவிற்கு தொகை செலுத்தியதில் தணிக்கையில் ஏதேனும் சுட்டிக்காட்டப்பட்டால் மனுதாரர் அந்த தொகை செலுத்த எந்தவித மறுப்பு தெரிவிக்கமால் செலுத்தப்படவேண்டும். அத்தொகை செலுத்தாவிடின் அனுமதி ஆணை ஊராட்சி மன்ற தலைவரால் ரத்து செய்யப்படும்.

தலைவர் 08.03.24
பேட்டை ரூரல் ஊராட்சி

இணைப்பு :

1. ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடம்

பெறுநர்

திருமதி.அந்தோணியம்மாள்,
W/o. ஆறுமுகம்,
3, தெற்கு தெரு, லஜபதி நகர்,
மலையாளமேடு, பேட்டை,
திருநெல்வேலி – 627004.

நகல் :

1. உதவி இயக்குநர், (ஊராட்சிகள்), திருநெல்வேலி.

2. வட்டார வளர்ச்சி அலுவலர், (கி.ஊ) மானூர் ஒன்றியம், திருநெல்வேலி.

Scanned with OKEN Scanner